RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21s14

OPEN ACCESS

# கீதாரி புதினத்தில் விளிம்பு நிலை மக்கள்

## பெ. வீரம்மாள் [அ, *]

[அ] தமிழ்த்துறை, பார்வதீஸ் கலை அறிவியல் கல்லூரி, திண்டுக்கல்-624002, தமிழ்நாடு, இந்தியா.

# Marginalized people in Keethari novel

## P. Veerammal [a, *]

[a] Department of Tamil, Parvathy's Arts and Science College, Dindigul–624002, Tamil Nadu, India

* Corresponding Author: pveerammal1983@gmail.com

Received: 08-01-2021
Revised: 07-05-2021
Accepted: 08-05-2021
Published: 11-05-2021

Check for updates

**ABSTRACT**

With a narrative of an ethnic group of the intersocial sect, it moves the reading in the midst of the incident descriptions of ordinary people as a compelling record of ethnic identities such as nomadism, location, occupation, proverb, ballad, etc., as a compelling record of their faith, ritual, deity, lifestyles such as marriage, customs, and food systems.

**Keywords:** Keethari novel, Writter Tamilselvi, Marginalized people, Nomadism

## விளிம்பு நிலை மக்கள்

ஆண்களும், பெண்களும் உழைக்கும் வர்க்கமாகப் போற்றப்படுகின்றனர். இயற்கைத் தொடர்பை வட்டார மொழி நடையில் யதார்த்தத்துடன் கீதாரி புதினம் அமைத்துள்ளது.

மண்ணையும் மண்ணின் மக்களையும் நேசிக்கும் ஒருவர் படைப்பாளியாகக் கிடைத்தது மண்ணுக்குக் கொடை, மொழிக்குப் பரிசு, இலக்கியத்திற்குக் கிடைத்த பேறு.

ஒரு சமூகப் பிரிவினரின் வாழ்வியல் முறைமைகளை வட்டார மொழி நடையில் தொடர்ந்து அடையாளப்படுத்தும் ஆளுமையாளராக விளங்குபவர் சு.தமிழ்செல்வி. கீழைத் தஞ்சை வட்டார மொழி நடையில் அவர் படைப்புகள் அமைந்துள்ளன (Tamilselvi, 2015). இப்புதினம் வட மாவட்டங்களில் இருந்து தென்பகுதிகளுக்குப் புலம் பெயர்ந்து நாடோடியாக வாழும் முறையை வழி நடத்தும் விளிம்பு நிலை இடையர் சங்கத்தைக் கதைப்பொருளாகக் கொண்டுள்ளது.

“திராவிடருக்கு முந்தைய இனக்குழு ஒருபக்கமும், இந்தோ- ஆரியரின் வருணமுறை மறுபக்கமும் நின்று கலிந்ததால் இந்து மதத்தில் சாதி அமைப்புமுறை உண்டானது.

விளிம்பு நிலையிலுள்ள ஒவ்வொரு சமூகப் பிரிவினரும் நிலையான வாழ்க்கை முறைமையுடன் கூடிய நிலவுடைமை, பொருளாதாரம் சமூக மதிப்பீடு போன்ற புறக்காரணிகளின் அடிப்படையில் தங்களை மேல்நிலையாக்கம் செய்யும் முயற்சியில் ஈடுபடுத்துவது இன்றளவில் காணப்படுகிறது.

## சமுதாய நிலை

ஒவ்வோர் இனக்குழுவிற்கும் சமூகப் பிரிவு வாழிடம், தொழில்முறை, இயற்கையோடு உள்ள தொடர்பு ஆகியவை சார்ந்து நம்பிக்கைகளும், சடங்குகளும் வேறானவையாக இருக்கும். இடையர்குல இனக்குழுவிடம் தொழில் சார்ந்து சில நம்பிக்கைகள் இருப்பதை இப்புதினம் பதிவு செய்கிறது. ஆடுகள் மேய்க்கும் பொழுது முயல் சிதறி ஓடுவது தீய சகுனமாக நம்பப்படுகிறது.

## புழங்குப் பொருட்களும் சடங்குகளும்

புழுங்கு பொருட்கள் பெரும்பாலும் மண்ணாலான பானை, சட்டிகள், அம்மி முதலிய கல்லாலான புழங்கு பொருட்கள் பயன்படுத்தியதை (பக்-119) இப்புதினம் பதிவு செய்கின்றன. கீதாரி மக்கள் தொழில்முறை நாடோடியாக அலைந்து திரிந்து தன் வாழ்வில் பெரும் துயருக்கு உள்ளாகின்றனர்.

“மனிதர்கள் ஊர் சுற்றிகள்இ நாடோடிகள் எங்கெல்லாம் திருவிழா நடக்கிறதோ அங்கெல்லாம் சென்று வித்தைக் காட்டி பிழைக்கக் கூடியவர்கள்” (Ramakrishnan, 2018).

சமயப் பின்புலத்தில் இல்லாமல் இனத்திற்கே உரிய இயற்கையோடு இயைந்த நாட்டார் தன்மை கொண்டனவாக உள்ளன. உணவு முறையைப் பார்க்கும் பொழுது நெல்லரிசி சோறு, குழம்பு, புலம்பெயர் இடத்தில் கிடைக்கக் கூடிய தானிய வகைகள் போன்றவையும், ஆடுகள் இறந்தால் அதன் கறியை வற்றல் போட்டு வைத்து உண்பதும், மிளகாய்ச்சாந்து அரைத்து வைத்து கொள்வதுமான உணவுமுறைகள் கூறப்படுகின்றன. பொங்கலன்று ஆடுகளைப் பெட்டைஇ கிடா என்று தனித்தனியாக அலங்கரித்து பின் தருவைப் போடும் இடத்தில் தெப்பம் கட்டி ஆட்டுக்குட்டியின் காதை அறுத்துச் சடங்கு செய்வது (கீதாரி பக்-114) போன்ற சடங்கு முறைமைகளும் கதையோட்டத்தின் ஊடே கூறப்பட்டுள்ளன.

## திருமணச் சடங்கு

திருமண முறையைப் பார்க்கும் போது சித்தப்பா முறையில் திருமணம் செய்து கொள்ளுதல் (பக்-98), அண்ணன் இறந்தால் அவன் மனைவியைத் தம்பி திருமணம் செய்து கொள்ளும் முறையும் (பக்-134), திருமணச் சடங்கில் மாப்பிள்ளைக்குப் பதிலாக அவன் ஆடு மேய்த்த தடிக்கம்பை வைத்து திருமணம் செய்யும் போக்கையும் (பக்-101), திருமணத்திற்குச் சீதனமாக ஆடுகளும் (பக்-52), பாத்திரம் பண்டங்களுடன் மாளிகை சாமான்களையும் சீதனமாய்க் கொடுப்பதும் ஆட்டுக்கார இடையர்களின் வழக்கமாயிருந்தன என்பதை இப்புதினம் விளக்குகிறது. இந்நிலை தொழிலையும் வாழ்க்கையையும் ஒன்றாக இணைக்கும் தன்மையைக் காட்டுகிறது.

## இறை நம்பிக்கைகள்

இடையர்கள் வணங்கும் தெய்வங்களாக நல்லமுனி நெறஞ்சாயி, மகமாயி, மாரியம்மன் போன்ற நாட்டார் மரபு சார்ந்த தெய்வங்கள் கூறப்படுகின்றன. இவை மட்டும் அல்லாமல் திருச்செந்தூர் முருகனை வணங்குவது இவர்களின் மரபு சார்ந்த நாட்டார் தெய்வ வழிபாடும், வேலன் மரபும் கலந்த நிலையைச் சுட்டுகிறது.

## தொழில்

இடையர் சமூகத்தை அடையாளப்படுத்தும் விதமாக அச்சமூகத்தின் தொழில்முறை குறித்த நாட்டார் வழக்காற்று கதையாடல் ஒன்றை முன் வைக்கிறது இப்புதினம். இக்கதையில் இடையர்கள் ஆடுமேய்த்து நாடோடியாகப் பிழைப்பதற்கான வழக்காற்று கதைப்பாடல் கூறப்படுகிறது. இவர்களின் தொழில்களாக ஆடு மேய்த்தல், இடைகட்டுதல் போன்றவை கூறப்பட்டுள்ளன. தொழில் முறையில்

ஆண், பெண் வேறுபாடில்லை. ஆடு இல்லாத இடையர்கள் ஆடு வைத்திருப்பவர்களிடம் வாடகைக்கு வாங்கி ஓராண்டிற்குப் பிறகு ஓர் ஆட்டிற்கு இரண்டு ஆடாகத் திருப்பித் தருவதாகக் கூறி அதன் புழுக்கைகளை விற்று பிழைப்பை நடத்துகின்றனர்.

இவற்றைத் தவிர வேறு தொழில் செய்வதில்லை. கேட்டாலும் தெரியாது என்பது மாதிரியான விடைகள் தாம் வரும். (பக்-165) இவர்கள் தொழில் ரீதியாக நிலவுடைமை சமூகத்தினரை அண்டி ஆதரவு சமூகமாகத் தங்களுடைய வாழ்வை முன் நகர்த்தக் கூடியவர்களாக உள்ளனர். வழக்காறுகளாகப் பழமொழி, கதைப்பாடல் போன்றவை பதிவு செய்யப்பட்டுள்ளன.

நாவல் முழுக்கத் தங்கள் சாதியம் குறித்த பழமொழிகள் (பக்-132) பொதுவான வாழ்முறை குறித்த பழமொழிகள் (பக்-137) என பல்வேறு பழமொழிகள் கூறப்பட்டுள்ளன.

கிடைக்கட்டும் பொழுது தூக்கம் வராமல் இருக்கப் பாடும் தெம்மாங்கு பாடல்களும் (பக்-208) சக்களத்தி சார்ந்த பாடல்களும் இயல்பாக இடம் பெற்றுள்ளன. ஆனால் இப்பாடலை இன்றைய தலைமுறையினர் மறந்துவிட்டனர்.

## இடையர்களின் கதை

இடையர்கள் ஏன் மழையிலும், தண்ணீரிலும் கிடந்து வருத்தப்படுகிறார்கள் என்பது இப்புதினத்தின் வழியாக அறியமுடிகின்றது. அவர்களின் கதையைக் கரிச்சா வாயிலாக வெள்ளைச்சாமி அறிந்து கொள்கிறான். மழை பெய்து வெள்ளம் வர ஆரம்பிக்கும் போது, ஓர் ஆட்டுக்காரன் மட்டும் தனியாகக் காட்டிற்குள் தங்கியிருந்தான். ஆட்டிற்குத் தண்ணீரிலேயே கிடையைப் போட்டு வேலியில் படர்ந்து இருந்த பிரண்டை கொடிகளை எடுத்து மெத்தையாக விரித்துக் கொண்டான்.

தென்னைக் கீற்றால் பின்னிய கீற்றை மேலே வைத்து சுகமாகத் தூங்கியிருக்கிறான். அவ்வாறு தூங்கும் போது என்ன சுகமாக இருக்கிறது என்று தன் மனத்திற்குள் நினைத்துக் கொண்டான். இந்த சுகமானது ஆண்டவனுக்குக் கூட கிடைத்திருக்காது என்று எண்ணும் போது பார்வதியும்இ பரமசிவனும் படி அளப்பதற்காக வருகினறனர். அந்த பொழுதில் அவன் கூறியதைக் கேட்ட இவர்கள் நம்மை விட நன்றாக இருக்கும் ஒருவனுக்கு நம்மால் என்ன அவனைப் பார்க்காமல் “நீ இப்படியே இரு” என்று வரம் கொடுத்தார்களாம். அதனால் தான் ஆடு மேய்ப்பவர்கள் இன்னும் மழையிலும் தண்ணீரிலும் இருந்து வேதனைப்படுகிறார்கள். ஆடுமேய்ப்பவர்களின் கதையானது பழைய மரபு போல் பின்பற்றப்படுகிறது. இன்றளவும் அவர்களின் நம்பிக்கையாகவும் உள்ளது.

## இடையர்களின் பிரிவுகள்

தமிழ்ச் சமூகத்தில் நாடோடி வாழ்முறை சங்ககாலம் தொட்டுத் தொடர்ந்த ஒன்றாகக் கருதப்படுகிறது. காலச் சூழ்நிலைக்கேற்ப வேறு நிலைகளில் தம்மைத் தகவமைத்து கொண்ட இடையர்கள், தம் சமூக பிரிவினரின் வாழ்வியலை இயல்பாகப் பதிவு செய்யும் இப்புதினம் அவர்களுக்கென நிலையான இருப்பிடம் எதையும் பதிவு செய்யவில்லை. ‘மேமங்கலம்’ என்னும் ஊர் சொந்த ஊராக இருந்தாலும் தொழில் முறையில் புலம்பெயர் வாழ்க்கையே மேற்கொள்கின்றனர். இருப்பிடம் இல்லாமல் வாழிடம் சார்ந்து கூண்டோ, வளசையையோ அமைத்துக்கொண்டு வாழ்கின்றனர்.

நிலம் வாங்கி வீடு கட்டுவதற்கான எண்ணம் நிலவுவதையும் இப்புதினம் பதிவு செய்கிறது. (பக்-120) கோனார் இனத்தவர்கள் இன்றளவும் இந்நிலையில் இருந்து தான் வருகின்றனர்.

## ஆடுமேய்ப்பவர்களின் சிக்கல்கள்

ஊர் விட்டு ஊர்வந்து நாடோடிகள் போல பிழைப்பு நடத்தும் ஆடுமேய்ப்பவர்கள் ஊமைகளாகவே இருக்கக்கூடிய நிலை உள்ளன. கோபம், அவமானம் என்பதையெல்லாம் இவர்கள்

ஒருபோதும் நினைப்பதில்லை. இவர்களைக் கீழ்த்தரமாகத் திட்டினாலும் பொறுமையாகக் கேட்டுக்கொண்டு வாய்திறக்காமல் போகும் இயல்புடையவர்கள் இடையர்கள். இவர்களின் இந்தப் பரிதாபமான நிலையைக் கண்டு இரக்கப்பட்டு யாராவது இவர்களிடம் விசாரித்தால் அதற்கு இவர்கள் சொல்லும் பதில் இன்னும் பரிதாபமாக இருக்கும்.

"யாரும் எங்கள சும்மா அடிக்க மாட்டாக போன வருசம் மொத வருசத்துல அவுக கொல்ல பயிறு பச்சியில எங்க ஆடுக மேய்சிருக்கும் அந்த கோவத்துல அடிக்கிறாக? நம்மமேல தப்புருக்குஇ பட்டுகிட்டுத்தானே போவணும்" (கீ.ப-111) என்று மிக இயல்பாகப் பதில் கூறுவார்கள் இவ்வாறு இடையர்களின் வாழ்க்கை நிலையை சு.தமிழ்ச்செல்வி கீதாரி நாவலில் பதிவிடுகிறார்.

## முடிவுரை

விளிம்பு நிலையிலுள்ள இடையர் குல சமூகத்தினருள் ஒரு குழுவை மட்டும் அடையாளப்படுத்தும் இப்புதினம் அவர்களின் சமூகஉறவுகள், மதிப்பீடுகள், பண்பாட்டு அசைவியக்கங்கள் மற்றும் தங்கள் வாழ்வைத்தேடி ஓடிக்கொண்டே இருக்கும் தொழில், நம்பிக்கை, சடங்கு, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை வட்டார மொழிநடையில் இடையர்களின் வாழ்க்கைச் சூழலைத் துன்பநிலையில் பதிவு செய்கிறது. இன்றளவிலும் இம்மக்களுக்கான உணவு, உடை, இருப்பிடம் இல்லாமையைக் காண்பதை இந்நாவலின் மூலம் அறியமுடிகின்றன.

## References

Ramakrishnan, S., (2018), Thuyil, Desanthiri Pathippagam, Chennai, India
Tamilselvi, S., (2015) Keethari, New century Book house, Chennai, India

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License